*International Multidisciplinary Innovative Research Journal*
*An International refereed e-journal*

**ISSN: 2456 - 4613**
**Volume - III (1)**
**November 2018**

# நாககுமார காப்பியத்தில் அருகக் கடவுள் புகழாரம்

**நாகஜோதி.செ**
உதவிப்பேராசிரியை, தமிழ்த்துறை
வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்.
தமிழ்நாடு, இந்தியா.

## ஆய்வுநோக்கம்

தமிழ் இலக்கிய வரலாற்றில் சோழர் காலம் பேரிலக்கியங்கள் உருவாகக் காரணமாக அமைந்தது. சமண, பௌத்த சமயம் சார்ந்து பெருங்காப்பியங்கள் ஐந்தும், சிறுகாப்பியங்கள் ஐந்தும் தோன்றின. ஐஞ்சிறுகாப்பியங்களில் ஒன்று நாககுமாரகாவியமாகும். இக்காப்பியத்தைப் பாடிய புலவர் யாரென்று அறியுமாறில்லை. ஆனால் சமணத்துறவியாக இருக்கலாம் என இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். இக்காப்பியம் பற்றி இலக்கிய வரலாற்றாராய்ச்சியாளர் மு.வரதராசனார், "நாககுமார காப்பியம் சைன சமயத்தை வலியுறுத்தி எழுதப்பட்ட காப்பியமாம். அந்த நூல் ஒரு செய்யுளும் எஞ்சாமல் மறைந்தது."1 என்கிறார். ஆனால் அக்காப்பியத்தை உ.வே.சா. பதிப்பித்துள்ளதாகக் கூறப்படுகிறது. இதனை அறிந்த உரையாசிரியர் கதி.முருகேசன் ஐந்து சருக்கங்களாக அமைந்துள்ள நூற்றி எழுபது பாடல்களுக்கும் உரை எழுதி 2015-ம் ஆண்டு சாரதா பதிப்பகத்தாரால் பதிப்பித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. சமயம் சார்ந்த இலக்கியங்கள் அனைத்தும் அந்தந்த கடவுளைப் புகழ்ந்து கூறி அச்சமயத்தின் கொள்கையையும் பறை சாற்றும். அவ்விதத்தில் சமணசமயம் சார்ந்த நாககுமார காப்பியத்தில் அருகக் கடவுளின் இயல்பும், பெருமையும், முதல் சருக்கத்தில் கூறப்பட்டுள்ளது. இச்சருக்கத்தில் அருகக் கடவுளின் புகழினை, சிரேணிக மன்னன் வாழ்த்தி வணங்கி விதந்து கூறுவதன் மூலம் புலவர் வெளிப்படுத்தியுள்ளார். அருகக் கடவுளின் புகழினை நாககுமாரகாப்பியத்தின் வழி அறிய முற்படுவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## கதை உருவாக்கத்திற்கான காரணம்:

மகத நாட்டின் மன்னன் சிரேணிகனும் அவன் மனைவி சாலினியும் தம் சுற்றத்தாரோடு விபுல மலையில் தவம் செய்யும் முனிவரைக் காணச் சென்றனர். மன்னன் இறைவனைத் துதித்து, முனிவரை வணங்கித் தரும உரைகளைக் கேட்டபின்

அம்முனிவரிடம் நாகபஞ்சமி கதையை உரைக்க வேண்டுகிறான். முனிவர், நாகபஞ்சமி கதையைக் கூறுவதாக இக்காப்பியம் அமைந்துள்ளது.

**நாககுமார காப்பியத்தின் கதைப் போக்கு:**

மகத நாட்டிலுள்ள கனகபுரம் என்னும் நகரை சயந்திரன் என்னும் அரசன் ஆண்டு வந்தான் அவனுக்கு விசாலநேத்தரை, பிரிதிதேவி என இரு மனைவியர் இருந்தனர். மூத்த மனைவியின் மகன் சிரீதரன், இளையளின் மகனாகிய பிரதாபத்தன். பல சாதனைகளை செய்து நாககுமாரன் எனப் பெருமை பெற்றவனானான்.

பல பெண்களை மணந்துகொண்ட இவன் நீண்ட கால ஆட்சிக்குப் பிறகு தன் மகன் தேவகுமாரனுக்கு முடிசூட்டினான். இதனைத்தொடர்ந்து அலமதி என்னும் ஞானியை வணங்கிப் போதனைகளைக் கேட்டறிந்து துறவு பூணக் கருதி நிர்வாண உருக்கொண்டு நோன்பு நோற்கலானான். பின்னர் தன் மனைவி இலக்கணையுடன் பதுமஸ்ரீ என்னும் ஆர்யாங்கனையை வணங்கித் துறவு மேற்கொள்கிறான். இத்தகைய கதை மூலம் சமண சமயத்தின் நோக்கம் நிறைவேறும் விதத்தில் புலவர் அமைத்துள்ளார்.

**அருகக் கடவுள் வீற்றிருக்கும் சிறப்பு**

சிரேணிக மன்னன் தன் தேவியுடன் முனிவரைக் கண்டு வணங்கி அருகக் கடவுளைத் துதிப்பதாக முதற்சருக்கத்தில் அமைந்துள்ளது. இத்துதிப்பாடல்வழி அருகக் கடவுள் அமர்ந்துள்ள, எழுந்தருளியுள்ள இடத்தின் சிறப்பினைப் புகழ்வதால் தன் மனதிற்கு இனிமையைத் தரும் எனக் கருதியுள்ளார் புலவர். எனவே சிரேணிக மன்னன் பக்தியுணர்வோடு பாடும் துதிப்பாடல்வழி வெளிப்படுத்தும் விதமாக,

…………………………………………..

“பூநான்கு மலர்ப்பிண்டிப் போத னீயே
புறவிதழ்சேர் மரைமலர்மேல் விரனால் விட்டுப்
பொன்னெயிலுண் மன்னியபுங் கவனு நீயே
அறவிபணி பணவரங்கத் தமர்ந்தாய் நீயே
ஐங்கணைவில் மன்மதனை யகன்றாய் நீயே
செறிபுகழ்சேர் சித்திநகர் தன்னை யாளும்

சிரீவர்த்த மானெனுந் தீர்த்த னீயே”2 (நா.கா.பா-16) என்கிறார். இத்தகைய வரிகள் மூலம் அருகக் கடவுள் அசோக மரத்தின் நிழலில் இருந்து பக்தர்களுக்கு அருள் தந்துள்ளார் என்பதையும் தாமரை மலரின் மென்மையும் குளிர்ச்சியும் மனதிற்கு இனிமையைத் தருவது போல பக்தர்களின் மனதிற்கு இனிமையைத் தருபவர் என்பதையும் உணரமுடிகிறது. மேலும் நான்கு பொன்மயமான மதிலில் எழுந்தருளுபவன் என்றும் நாக மரத்தின் நிழலில்

அமா்ந்திருப்பவன் என்றும் மன்மதனை வென்றவன் என்றும் அருகக் கடவுளைப் புகழ்ந்துரைத்துள்ளமையை அறிய முடிகிறது.

**அருகக் கடவுளின் இயல்பு:**

இறைவன் உலக உயிர்களைக் காப்பவன்; ஆசைகளைத் துறந்தவன்; விருப்பு, வெறுப்பு அற்றவன்; சுயநலமற்றவன்; அறத்தை நிலைநாட்டுபவன்; குற்றமற்றவன்; தன்னை நாடுவோருக்குச் சுகம் தருபவன்; அழுக்காறு அற்றவன். இத்தகைய அனைத்தும் நிறைந்தவன் அருகக் கடவுள் என்பதை நாககுமார காவியம்,

''அறவனீ யமலனீ யாதி நீயே''3 (நா.கா.பா18:1) என்றும்

''முனிவர்தமக் கிறையான மூர்த்தி நீயே
மூவா முதல்வனெனு முத்த னீயே
இனிமையா னந்தசுகத் திருந்தாய் நீயே''

''முனிவுமுத லில்லாத முனைவ னீயே''4 (நா.கா.பா-19:1-3,5)என்கிறது. மேலும் அருகக் கடவுள் தன் அடியவர்கள் மனம் நன்முறையில் செயல்படுவதற்கான வழியாகிய ஜீவ, அஜீவ, அஸ்ரவ, பந்த, புண்ணிய, பாபஸ்ம்வர, நிர்ஜரா, மோட்சம் என்னும் நிலைகளையும், சுத்த நிச்சயநயம், அசுத்த நிச்சயநயம், அனுசரித சத்பூத வியவகார நயம், உபசரித அசத்பூத வியவாகர நயம் என்னும் நயங்களையும் பிறப்புக்குக் காரணமான நல்வினை, தீவினை ஆகிய வினைகளின் நிலையினை எடுத்துரைக்கும் இயல்புடையவன் என்பதை,

''நவபதநன் னயமாறு நவின்றாய் நீயே
நன்முனிவர் மனத்திசைந்த னாத நீயே
உவமையிலா வைம்பதமு முரைத்தாய் நீயே
பரம நிலையமர்ந்த பரமன் நீயே
சிவமயமாய் நின்றதிகழ் தேச னீயே
சிரீவர்த்த மானனெனும் தீர்த்த னீயே'' 5 (நா.கா.பா-20)

என்கிறது நாககுமார காவியம்.

**அருகக் கடவுள் அனைத்திலும் நிறைந்தவன்:**

ஒவ்வொரு சமயத்தாரும் தம் இறைவன் உலகைப் படைத்தவன் என்றும் அவனால் உலக உயிர்கள் காக்கப்படுகிறது என்றும் கூறுவர். அவ்விதத்தில் சமணசமயக் காப்பியமாகிய நாககுமார காவியம் அருகக் கடவுளின் பெருமையைப் பறைசாற்றுவதாக அமைந்துள்ளது. அக்கடவுள் எல்லாவற்றிலும் நிறைந்து, அனைத்தையும் செயல்படுத்தும் முதற்பொருளானவனாக, முக்காலத்தையும் உணர்ந்தவனாக உள்ளான் என்பதனை,

''காலமொரு மூன்றுணர்ந்த கடவு ளீயே

பஞ்சாத்தி தானுரைத்த பரம னீயே

''ஆரியனீ சீரியனீ யனந்த னீயே

திரிலோக லோகமொடு தேய னீயே

தேவாதி தேவனெனுந் தீர்த்த னீயே

திரிபுவனந் தொழுதிறைஞ்சுஞ் செல்வ னீயே

சிரீவர்த்த மானனெனுந் தீர்த்த னீயே''6 (நா.கா.பா-18:2-4,7-8) என்கிறது நாககுமார காவியம்.

**அடியவர்களுக்கு அருளுபவன்:**

இறைவன் உயிர்களை உருவாக்கி அருளுபவன்; உலகங்கள் அனைத்தையும் வாழ்விடமாகக் கொண்டவன்; தேவர்களுக்கெல்லாம் தலைவன்; தன்னை நாடும் அடியவர்களுக்கு ஐம்புலன்களை அடக்குபவன்; நற்குணம் நிறைந்தவர்களின் மனதில் அமர்பவன்; நல்வினை,தீவினைகளை உணர்த்துபவன் என்றெல்லாம் சைவ, வைணவ, பௌத்த சமயங்கள் பறை சாற்றியிருப்பது போன்று சமண சமயக் காப்பியமாகிய நாககுமார காவியமும் இறைவன் அடியவர்களுக்கு அருளும் சிறப்பினைக் கூறியுள்ளது. அருகக் கடவுளினின் அருள் தன்மையினை,

''பொறியொடுவல் வினைவென்ற புனித னீயே'' 7(நா.கா.பா-16:1)

''பரமநிலை யொன்றெனவே பணித்தாய் நீயே''8 (நா.கா.பா-17:4)

''உத்தமர்த மிருதயத்து ளுகந்தாய் நீயே

பவமயமா மிருவினையைப் பகர்ந்தாய் நீயே' 9(நா.கா.பா-20:4-5)

என்கிறது நாககுமார காவியம்.

**தொகுப்புரை**

நாககுமார காப்பியத்தைப் பாடிய புலவர் அருகக் கடவுளின் பெருமையைப் பறை சாற்றும் விதத்தில் இக்காப்பியத்தின் முதற் சருக்கத்தை அமைத்துள்ளார். அதன்வழி அருகக் கடவுள் வீற்றிருக்கும் சிறப்பினையும், அருகக் கடவுள் இயல்பினையும், இவ்வுலகத்தின் செயலாக்கமானவனாக உள்ளான் என்பதையும், தன்னை நாடும் அடியவர்கள் மனதில் நீக்கமற நிறைந்திருப்பவன் என்றும், அனைத்துயிர்களையும் காத்து அருளுபவன் என்றும் கூறி அருகக் கடவுளுக்குப் புகழாரம் சூட்டியுள்ளார் என்பதை அறியமுடிந்தது.

**அடிக்குறிப்புகள்**

1. மு.வரதராசன், தமிழ் இலக்கிய வரலாறு,ப-191
2. கதிர்முருகு(உரை)நாககுமாரகாவியம்,ப-12
3. மேலது,ப-15
4. மேலது,ப-16
5. மேலது,ப-17
6. மேலது,ப-15
7. மேலது,ப-12
8. மேலது,ப-13
9. மேலது,ப-17